| Roll No. | | | | | | | | | | | | Serial No. of Q. C. A. B. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 50 + 28 = 78 ]  [ ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 16

Total No. of Questions : 50 + 28 = 78 ]  [ Total No. of Printed Pages : 16

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**  **ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು**

**Code No. : 10-T**  **Subject : First Language — TAMIL**

ದಿನಾಂಕ : 08. 06. 2009 ]  [ Date : 08. 06. 2009

ಸಮಯ : ಬೆಳಿಗ್ಗೆ 10-30 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-30 ರವರೆಗೆ ]  [ Time : 10-30 A.M. to 1-30 P.M.

ಪರಮಾವಧಿ ಅಂಕಗಳು : 125 ]  [ Max. Marks : 125

## FOR OFFICE USE ONLY

### PART – A

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | | 10. | | 19. | | 28. | | 37. | | 46. | |
| 2. | | 11. | | 20. | | 29. | | 38. | | 47. | |
| 3. | | 12. | | 21. | | 30. | | 39. | | 48. | |
| 4. | | 13. | | 22. | | 31. | | 40. | | 49. | |
| 5. | | 14. | | 23. | | 32. | | 41. | | 50. | |
| 6. | | 15. | | 24. | | 33. | | 42. | | × | |
| 7. | | 16. | | 25. | | 34. | | 43. | | × | |
| 8. | | 17. | | 26. | | 35. | | 44. | | × | |
| 9. | | 18. | | 27. | | 36. | | 45. | | × | |

***Total Marks of Part – A***

### PART – B

| Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks | Q. No. | Marks |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 51. | | 56. | | 61. | | 66. | | 71. | | 76. | |
| 52. | | 57. | | 62. | | 67. | | 72. | | 77. | |
| 53. | | 58. | | 63. | | 68. | | 73. | | 78. | |
| 54. | | 59. | | 64. | | 69. | | 74. | | × | |
| 55. | | 60. | | 65. | | 70. | | 75. | | × | |

***Total Marks of Part – B***

| **Total Marks in words** | | **Grand Total** | |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1. ✓ | | ✓ | ✓ |
| 2. ✓ | | | |
| *Signature of Evaluators* | *Registration No.* | *Signature of the Deputy Chief* | *Signature of the Room Invigilator* |

[ Turn over

*முக்கிய குறிப்பு :*

i) இந்த வினாத்தாளுடன் கூடிய விடைத்தாள் தொகுப்பு **பகுதி - A** மற்றும் **பகுதி - B** என்ற இரு பிரிவுகளைக் கொண்டது.

ii) **பகுதி - A** 50 வினாக்களையும், **பகுதி - B** 28 வினாக்களையும் கொண்டுள்ளன.

iii) இந்த வினாக்களுக்கான விடைகளை எழுதுவதற்காக இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

iv) **பகுதி - A** -வில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின்படி, சரியான விடையைத் தேர்வு செய்து அதன் கீழ் உள்ள விடை பகுதியில் விடையை எழுதவும்.

v) **பகுதி - B** -யில் உள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்காக, ஒவ்வொரு வினாவிற்கும் போதிய அளவு இடம் விடப்பட்டுள்ளது. அதில் விடையை எழுதவும்.

vi) எல்லா வினாக்களுக்கும் சரியான விடை எழுதுக.

## பகுதி - A

கீழ்வரும் ஒவ்வொரு வினாவிற்கும் / முழுமைபெறாத கூற்றுகளுக்கும் ( Incomplete statements ) நான்கு மாற்று விடைகள் தரப்பட்டுள்ளன. மிகச் சரியான விடை என்று நீங்கள் கருதுபவற்றை தேர்ந்தெடுத்து அதன் கீழ் உள்ள விடை பகுதியில் விடையை எழுதவும் : $50 \times 1 = 50$

1. தமிழில் நாட்குறிப்பு எழுதிய சிறப்பிற்குரியவர்

(A) டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் (B) மீனாட்சி சுந்தரம்பிள்ளை

(C) ஆனந்தரங்கப் பிள்ளை (D) டாக்டர் அ. சங்கரி.

*விடை :* __________

2. 'ஆனந்த ரங்க விஜய சம்பு' - என்ற சமசுகிருத காவிய நூலின் ஆசிரியர் யார் ?

(A) சீனிவாச கவி (B) கவி கஸ்தூரிரங்கய்யா

(C) முத்துப்புலவர் (D) சதாசிவ தேசிகர்.

*விடை :* __________

3. மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்களின் தலைசிறந்த மாணவர்களுள் ஒருவர்

(A) கி. ஆ. பெ. விசுவநாதம் (B) உ. வே. சாமிநாத ஐயர்

(C) ந. மு. வேங்கடசாமி நாட்டார் (D) சர். சி. வி. இராமன்.

*விடை :* __________

4. உலகியல் வாழ்விற்கு

(A) அன்பு வேண்டும் (B) வீரம் வேண்டும்

(C) பொருள் வேண்டும் (D) பண்பு வேண்டும்.

*விடை :* __________

5. 'துடி' என்பது

(A) துளைக்கருவி (B) தோற்கருவி

(C) இரும்புக்கருவி (D) வெண்கலக் கருவி.

*விடை :* __________

6. பாகவத ஆட்டக்காரர் ஆட்டத்தின் போது

(A) தூங்குவதில்லை (B) குளிப்பதில்லை

(C) உணவு உண்பதில்லை (D) மது அருந்துவதில்லை.

*விடை :* ____________________

7. திம்மக்கா வளர்த்த மரங்கள்

(A) 184 (B) 384

(C) 284 (D) 584

*விடை :* ____________________

8. ‘மகாத்மா காந்தியடிகளின்’- பேத்தி

(A) சுமித்ரா குல்கர்ணி (B) அமிர்தா குல்கர்ணி

(C) விமலா குல்கர்ணி (D) பில்லுக் குல்கர்ணி.

*விடை :* ____________________

9. ‘பயன்மிகு பயணம்’ - பாடத்தின் ஆசிரியர்

(A) திரு. பாலசுப்பிரமணியம் (B) திரு. முருகு. சுப்பிரமணியம்

(C) திரு. அன்பு சுப்பிரமணியம் (D) திரு. சிவ. சுப்பிரமணியம்.

*விடை :* ____________________

10. ‘சான்பிரான்சிஸ்கோ’ - எங்கு உள்ளது ?

(A) பெங்களூர் (B) அமெரிக்கா

(C) ஈராக் (D) இலண்டன்.

*விடை :* ____________________

11. சோபியாவின் கணவர் பெயர்

(A) டால்ஸ் டாய் (B) இறையடியார்

(C) செர்ட காப் (D) மாஸ்தி வேங்கடேஷ்.

*விடை :* ____________________

12. டால்ஸ் டாய்-ன் நண்பர்களுள் ஒருவர்

(A) மார்ட்டிஸ் (B) பில்லுச்சேரி

(C) செர்ட காப் (D) ஜி. யூ. போப்.

*விடை :* ____________________

13. சீவகனின் குல குரு

(A) வீரமா முனிவர் (B) சுந்தர முனிவர்

(C) அகத்தியர் (D) குடிலன்

*விடை :* ____________________

14. நிலம் எவ்வளவிற்கு விற்கப்பட்டது ?

(A) 100 பொற்காசுகள் (B) 200 காசுகள்

(C) 400 காசுகள் (D) 1000 காசுகள்.

*விடை :* ______________________

15. மனோன்மணியின் தோழி யார் ?

(A) சிவகாமி (B) வாணி

(C) சுதமதி (D) மணிமேகலை.

*விடை :* ______________________

16. நிலத்தை விற்றவர்

(A) இளநாகன் (B) நன்னன்

(C) பூங்குன்றன் (D) பாலதேவன்.

*விடை :* ______________________

17. கண்ணதாசனின் இயற்பெயர்

(A) சித்தையா (B) முத்தையா

(C) கவியரசு (D) வணங்காமுடி.

*விடை :* ______________________

18. திரவியம் - என்பதின் பொருள்

(A) கடவுள் (B) கடல்

(C) செல்வம் (D) வீரம்.

*விடை :* ______________________

19. மணலுள் மறைந்து கிடப்பது

(A) எலி (B) பாம்பு

(C) தவளை (D) எறும்பு.

*விடை :* ______________________

20. தமிழரசியின் செங்கோலாக விளங்குவது

(A) சிந்தாமணி (B) திருக்குறள்

(C) பழமொழி (D) மணிமேகலை.

*விடை :* ______________________

21. 'தமிழ்த் தென்றல்' - என்று அழைக்கப்பட்டவர்

(A) திரு. வி. கலியாணசுந்தரனார் (B) கவியரசு கண்ணதாசன்

(C) கவிஞர் சுரதா (D) திரு. வைரமுத்து.

*விடை :* ______________________

22. அவையஞ்சானின் கல்வி எத்தகையது ?

(A) புனிதம் (B) இனிதாகும்

(C) பணமாகும் (D) வீரம்.

*விடை :* __________

23. அருச்சுனன் வில் எது ?

(A) காண்டீவ வில் (B) இரும்பு

(C) தருமன் (D) கூர்மை.

*விடை :* __________

24. மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய நூல்

(A) பாண்டியன் பரிசு (B) சேரநாட்டு வரலாறு

(C) நாஞ்சில் நாட்டு சரித்திரம் (D) பிரதாப முதலியார் சரித்திரம்.

*விடை :* __________

25. தேயக் கண்டது

(A) வெள்ளம் (B) சந்தனம்

(C) சக்கரை (D) களிமண்.

*விடை :* __________

26. பாம்பு எதை உண்ணும் ?

(A) தண்ணீர் (B) மீன்

(C) புறா (D) காற்று.

*விடை :* __________

27. வீர சைவத்திற்கு புத்துயிர் அளித்தவர்

(A) குவெம்பு (B) சோமசுந்தர்

(C) பசவண்ணர் (D) சபாபதி.

*விடை :* __________

28. முடுக்காய் நின்றவள்

(A) முத்தாள் (B) மாரி

(C) காளி (D) சூரி.

*விடை :* __________

29. ‘மலரும் மாலையும்’ - என்ற நூலின் ஆசிரியர்

(A) மீனாட்சி சுந்தரம் (B) கல்யாணசுந்தரம்

(C) தேசிக விநாயகம் (D) வேத நாயகம்.

*விடை :* __________

30. நீ தலை நிமிர்ந்தால் நீலவானம்

(A) வெறி பிடிக்கும் (B) சூடு பிடிக்கும்

(C) குடை பிடிக்கும் (D) தீப்பிடிக்கும்.

*விடை :* ______

31. 'சமாதானப்புறா' எங்கு குளித்தெழுந்தது ?

(A) கங்கை (B) இந்துமகா சமுத்திரம்

(C) காவேரி (D) வங்கக்கடல்.

*விடை :* ______

32. இன்னிசை அளபெடை எது ?

(A) எடுப்பதூஉம் (B) கலங்ங்கு

(C) இலமென்றசைஇ (D) போஒய்ப்.

*விடை :* ______

33. வெள்ளை அடித்தான் என்பது

(A) இடவாகு பெயர் (B) சினையாகு பெயர்

(C) பண்பாகு பெயர் (D) தொழிலாகு பெயர்.

*விடை :* ______

34. தொழிலை மட்டும் குறிக்கும் வினைச்சொல்

(A) இடப்பெயர் (B) தொழிற்பெயர்

(C) பண்புப்பெயர் (D) பெயர்ச்சொல்.

*விடை :* ______

35. க, இய, இயர் என்று விகுதியைப் பெற்று நிற்பது

(A) பண்பு வினைமுற்று (B) ஏவல் வினைமுற்று

(C) வியங்கோள் வினைமுற்று (D) உருபு மயக்கம்.

*விடை :* ______

36. பெயரிடையோ, வினையிடையோ சார்ந்து நின்று பொருள் தரும் சொல்

(A) வினைச்சொல் (B) இடைச்சொல்

(C) உரிச்சொல் (D) பெயர்ச்சொல்.

*விடை :* ______

37. தொகை நிலைத் தொடர் எத்தனை வகைப்படும் ?

(A) ஒன்று (B) மூன்று

(C) நான்கு (D) ஆறு.

*விடை :* ____________________

38. பெயரெச்சத் தொடர்

(A) வருக வருக (B) முருகா வா

(C) வந்த முருகன் (D) மற்று ஒன்று.

*விடை :* ____________________

39. 'குறு குறு' நடந்து இதில் குறு குறு என்பது

(A) இரட்டைக்கிளவி (B) அடுக்குத்தொடர்

(C) உரிச்சொல் தொடர் (D) பெயர்ச்சொல்.

*விடை :* ____________________

40. குற்றெழுத்து நெட்டெழுத்தாய் மாற்றம் பெறுவது

(A) குறுக்கல் விகரம் (B) வலித்தல் விகரம்

(C) நீட்டல் விகரம் (D) மெலித்தல் விகரம்.

*விடை :* ____________________

41. 'உடம் படுமெய்' - எழுத்துக்கள் எவை ?

(A) ய், ச் (B) வ், ந்

(C) ய், ம் (D) ய், வ்.

*விடை :* ____________________

42. அளவடி அல்லது நேரடி

(A) நான்கு சீர் (B) இரண்டு சீர்

(C) மூன்று சீர் (D) ஐந்து சீர்.

*விடை :* ____________________

43. செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது

(A) மோனை (B) எதுகை

(C) முரன் (D) விளிச்சொல்.

*விடை :* ____________________

44. பாக்களின் வகைகள்

(A) இரண்டு (B) மூன்று

(C) நான்கு (D) ஐந்து.

*விடை :* ______________________

45. செய்யுளின் அடிதோறும் சீர்களின் எழுத்து, சொல், பொருள் அழகுபடத் தொடுப்பது

(A) தொடை (B) இடை

(C) கடை (D) முரன்.

*விடை :* ______________________

46. இரு பொருள்படுமாறு அமைத்துப்பாடுவது

(A) உவமை (B) வெண்பா

(C) பிறிது மொழிதல் (D) சிலேடை.

*விடை :* ______________________

47. பிறிது மொழிதல் அணி என்பதன் வேறுபெயர்

(A) ஒட்டணி (B) உவமையணி

(C) சொல்லணி (D) வேற்றுமை அணி.

*விடை :* ______________________

48. ‘மெய்’ எழுத்துக்கள் மொத்தம்

(A) 12 (B) 28

(C) 18 (D) 27.

*விடை :* ______________________

49. வீசு தென்றல் என்பது

(A) பண்புத் தொகை (B) வேற்றுமைத் தொகை

(C) பெயர்ச்சொல் (D) வினைத்தொகை.

*விடை :* ______________________

50. ‘பூ+அழகு = பூவழகு’ - இதில் அமைந்த உடம்படும் மெய்

(A) இகரம் (B) அகரம்

(C) யகரம் (D) வகரம்.

*விடை :* ______________________

## பகுதி – B

***குறிப்பு :*** *பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடை தருக :* $11 \times 2 = 22$

51. ஆனந்தரங்கப் பிள்ளையைப் போற்றி பாராட்டிய புலவர்களைக் குறிப்பிடுக ?

52. உடல் நலம் காத்தல் பற்றி வள்ளுவர் கூறுவது யாது ?

53. யக்ஷகான கோடங்கியின் பணி யாது ?

54. காந்தியடிகளின் பேத்தி சின்னப்பிள்ளை குறித்துக் கூறியன யாவை ?

55. மனோன்மணி புருடோத்தமனுக்கு மாலையிட்ட நிகழ்ச்சியினை எழுதுக.

56. அரியணையில் சிறுவனைக் கண்ட இருவரும் நினைத்தது யாது ?

57. இறைவனை நோக்கி குணங்குடி மஸ்தான் இயம்பியது யாது ?

58. 'நாய் பெற்ற தெங்கம்பழம்' - என்ற பழமொழியினை விளக்குக.

59. மணி பல்லவத்தில் ஆபுத்திரன் அடைந்த துன்பம் குறித்து எழுதுக.

60. 'திங்கள் மேல் நீட்டும் தன் கை' - சேரன் யானையின் செயலை எழுதுக ?

61. பெண்ணடிமையினால் விளையும் கேடு குறித்து பாரதிதாசன் கருத்தைச் சுருக்கி எழுதுக.

*குறிப்பு : பின்வருவனவற்றிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்குக :* 7 × 2 = 14

62. ''இங்கேயிருந்து சொல்லுகிற பாடல்களை அங்கே வந்து சொன்னால் அவர்கள் மிகவும் திருப்தியடைவார்கள்''.

63. ''தமிழ் இலக்கியத்தில் மிகப்பெரிய சாதனை படைத்த படைப்பிலக்கியம் திருக்குறள்''

64. ''நீங்கள் எந்த நாடு, எந்தெந்த ஊரைச் சுற்றிப் பார்த்தீர்கள் ?''

65. ''என்னுடைய மனத்தை மயக்குகிறது இச்சோலை''.

66. ''நானும் நீயும் வேறிடத்திருக்க வேண்டும்''

67. ''எவ்வழி நல்லவ ராடவர்

அவ்வழி நல்லை ...... ''

68. .............. — ''பலர்

மாளுவதும் கொடுமையன்றோ

தம்பியே தம்பி.''

*குறிப்பு : பின்வரும் வினாக்களுக்கு விடை தருக :* $3 \times 3 = 9$

69. முதியவராக வந்த - கரிகாலன் வழங்கிய தீர்ப்பின் கதையினைச் சுருக்கமாக வரைக.

70. ''காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்'' - இப் பழமொழியை விளக்கி எழுதுக.

71. ஏவலுக்கும், வியங்கோளுக்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக ?

*அல்லது*

ஆகுபெயர் என்றால் என்ன ? அதன் வகையினை வரிசைப்படுத்துக.

***குறிப்பு*** *: பின்வரும் வினாக்களுக்கு விரிவான விடை தருக :* 3 × 4 = 12

72. பாரத நாட்டின் சிறப்புகளாக திரு. வி. க. கூறியுள்ளவற்றை எழுதுக.

*அல்லது*

திரௌபதி நீதி கேட்டழுதபோது வீமன் கூறியவற்றை எழுதுக.

73. 'பாகவத மேள ஆட்டம்' - குறித்து எழுதுக.

*அல்லது*

திருக்குறள் உலகப் பேரறிஞர்களால் புகழப்படும் நூல் என்பதை சான்றுடன் எழுதுக.

74. பூச்சமரச் சோலை உருவான சூழலையும், அதனிடம் டால்ஸ்டாய் வைத்திருந்த பற்றையும் குறித்து எழுதுக.

*அல்லது*

பில்லுக்களஞ்சியம், அமைத்த சின்னப்பிள்ளையின் சாதனையினை விளக்குக.

*குறிப்பு : அடிபிறழாமல் எழுதுக :* 1 × 4 = 4

75. ''உலகம் யாவையும் .......... எனத் தொடங்கும் பாடலை அடிமாறாமல் எழுதுக.

*அல்லது*

''உறுபசியும் ..........
.......... நாடு''. மற்றும்
''நாடென்ப ..........
.......... நாடு.'' என்ற திருக்குறளை எழுதுக.

76. ***குறிப்பு*** : *பின்வரும் உரைநடையினைப் படித்து கேட்கப்பட்ட வினாவிற்கு விடை தருக.* 1 × 4 = 4

அமுத சுரபியில் இட்ட உணவு எடுக்க எடுக்கக் குறையாமல் வளர்ந்து கொண்டே வரும் என்றும், அது கொண்டு ஏழைகளின் பசிப்பிணியைப் போக்கிய ஆபுத்திரனால் அப்பாத்திரம் கோமுகிப் பொய்கையில் இடப்பட்டது என்றும், அதன் வரலாற்றை அறவண அடிகள் பால் அறியலாம் என்றும் தீவதிலகை மணிமேகலையிடம் கூறினாள்.

*வினாக்கள் :*

1. அமுதசுரபியின் சிறப்பு யாது ?

2. ஏழைகளின் பசிப்பிணியைப் போக்கியவன் யார் ?

3. அமுத சுரபியினை எந்தப் பொய்கையில் இட்டான் ஆபுத்திரன் ?

4. தீவதிலகை அமுதசுரபியின் வரலாற்றை யாரிடம் கூறினாள் ?

77. *பின்வருவனவற்றுள் ஏதேனும்* ***ஒன்று*** *குறித்து கட்டுரை வரைக :* 1 × 5 = 5

1. கணிப்பொறியும் பயனும்
2. நீ விரும்பும் தலைவர்
3. வரதட்சணை.

78. *கடிதம் எழுதுக :* 1 × 5 = 5

உன் ஊரில் நடைபெறும் பொங்கல் விழாவினைக் காண வருமாறு உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

*அல்லது*

உன் தெருவில் நூலகம் அமைத்து உதவும்படி மாநகராட்சிக்கு கடிதம் எழுதுக.